[1979 எப்ரல் 26

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தணிக்கை செய்வது என்பது கணக்குகளிலே இருக்கும்படியான குறைபாடுகளைக் கண்டுபிடித்து சரி செய்வதற்காக. ஆகவே குறைபாடுகள் இருக்கின்றனவா என்று ஏற்கனவே அங்கத்தினர் கேட்டார். அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் விடை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்தக் கோவை சிந்தாமணி அங்காடியில் முதலில் இருந்த டைரக்டர்ஸ் போர்டைக் கலைத்து, தனி ஆஃபீசர் நியமித்தார்களே, அதற்கு ஊழல்தான் காரணம் என்று சொல்லப் பட்டு, அதன்மீது விசாரணைகள் நடைபெற்றதாகவும் சொல்லப் பட்டு இருந்தது. அந்த விசாரணை என்ன ஆயிற்று? யார் அந்த ஊழல் பேர்வழிகள்? எவ்வளவு ஊழல்கள் நடந்தன? அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற விவரங்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் இரண்டு விவரங்களைக் கேட்டிருக்கிறார். அந்தத் தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் உண்டா என்று கேட்டிருக்கிறார்கள். குறைபாடுகள் உண்டு. அந்த விவரங்கள் தணிக்கை அறிக்கையிலே இருக்கின்றன, தனிக்கேள்வி போட்டால் நிச்சயமாக என்ன, என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்ல கடமைப்பட்டிருக் கிறேன்.

இரண்டாவது விவகாரம், 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் தேதியன்று, சிந்தாமணி கூட்டுறவு அங்காடி, அன்றைக்கு சில குறைபாடுகளுக்காக கலைக்கப்பட்டது. மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று கேட்டிருக்கிறார்கள். மேல் நடவடிக்கை கள், குற்றம் செய்தவர்கள் மீது—உரிய நடவடிக்கைகள்— எடுக்கப் பட்டது. அதற்கான முழு விவரங்கள் தேவைப்பட்டால், தனிக் கேள்வி ஒன்றினைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குடந்தை சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலை

*வினா எண். 825—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) 1977–78 ஆம் ஆண்டின் குடந்தை சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலையின் தணிக்கை அறிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) அவ்வறிக்கை மீது Special report ஏதேனும் வரப் பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) சந்திரசேகர புரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் 1977-78 ஆம் ஆண்டிற்கான தணிக்கை இன்னும் முடிவு பெறவில்லை.

(ஆ) இப்பண்டகசாலையின் 31-12-77 தேதி வரைக்கான கணக்குகளை தணிக்கை செய்தபோது காணப்பட்ட குறைகளுக்கான ஓர் தனி அறிக்கை, கும்பகோணம் மாவட்ட கூட்டுறவு தணிக்கை அதிகாரியிடமிருந்து 17-3-79-ந் தேதியன்று பதிவாளருக்கு வரப்பெற்றுள்ளது.

(இ) இத்தனி அறிக்கையின் மீது தக்க நடவடிக்கை எடுக்கச் சொல்லி தஞ்சை மண்டல இணைப்பதிவாளர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தை சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலையில் தொழிலாளர்களை முறையாக நிர்வாகம் நடத்துவது இல்லை என்று கூறப்படுகிறது. அதுபற்றி ஏதாவது புகார் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களின் பிரச்னைகள் பற்றிய சில விவரங்கள் மனுக்கள், முறையீடுகள் வந்திருக்கின்றன. அதனை அரசு பரிசிலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளை செய்துக் கொண்டிருக்கிறது.

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம்.

*வினா எண். 826 : திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1978-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டப்படி இதுவரை சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி ஆகிய நகரங்களில் உபரியாக எடுக்கப்பட்ட நிலம் எத்தனை சதுர மீட்டர்?

(ஆ) உபரி நிலத்தை கிரயத்திற்கு விற்கும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) (ஆ) & (இ) உபரி நிலம் இதுவரை கையகப்படுத்தவில்லை.